بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/08/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் மற்றும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரிழ்) ஆகியோரின் உயர் அந்தஸ்து, மேன்மை குறித்து ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

அல்லாஹ் இக்காலத்தில் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வாங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களை நெறி நீதி தீர்ப்பவர்களாக ஆக்கி அனுப்பியுள்ளான். முஸ்லிம்களுக்கு அவர்கள் ஓர் ஒற்றுமையை வழங்க வேண்டியிருந்தது. எனவே இன்று நாம் பார்க்கின்றோம், முஸ்லிம்களின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்திருக்கிறார்கள்; மேலும் இலட்சக்கணக்கில் ஒவ்வொரு வருடமும் இணைந்து கொண்டே செல்கின்றனர். ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் நெறி நீதி தீர்ப்பவர்களின் ஜமாஅத் பேதமைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நிறுவப்பட்டுள்ளது. உண்மையை பரப்புவதிலிருந்தும் உண்மை பேசுவதிலிருந்தும் நாம் நின்று விடக்கூடாது. இதற்காக நாம் தியாகங்களையும் செய்து வருகின்றோம்.

**இன்றைய நாட்களில் நாம் முஹர்ரம் மாதத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். இது இஸ்லாமிய வருட காலண்டரில் முதல் மாதமாகும். ஆங்கில வருடம் துவங்கும் போது நாம் ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். ஆனால் துர்பாக்கியம் என்னவென்றால், இஸ்லாமிய வருடம் துவங்கும்போது பல முஸ்லிம் நாடுகளில் இந்த பிரிவினை காரணமாக கொலைகளும் நாசங்களும் செய்யப்படுகின்றன. இந்த மார்க்கமோ அமைதி மற்றும் சமாதானத்தின் மிக உயரிய போதனையை வழங்கக்கூடிய மார்க்கமாகும். ஏன் இதை ஏற்கக் கூடியவர்கள் தமது வருடத்தை குழப்பங்கள், சச்சரவுகள் மற்றும் கொலைகளால் துவங்குகின்றனர்!** நாம் சிந்திக்க வேண்டும்; நாம் நமது தோரணைகளை மாற்ற வேண்டும். எவ்வாறு நாம் முஸ்லிம்களை ஒரே சமுதாயமாக்கி இந்த குழப்பங்களையும், பயங்கரவாதங்களையும் முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று நாம் பார்க்க வேண்டும். ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நமது எஜமானரும் நாம் பின்பற்றுவதற்குரியவர்களுமான ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் மலரும் என்ற நற்செய்தியையும் நமக்கு வழங்கி இருந்தார்கள். முஸ்லிம்களை ஒரே சமுதாயமாக்கும் வழியாகவும் அது ஆகிவிடும். முஸ்லிம்களின் முன்னேற்றம் மற்றும் ஒற்றுமைக்கான ஓர் ஒளிரும் அடையாளமாகிவிடும். ஆக, திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களிலிருந்து தெரியவரும் அந்த அடையாளங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்ற அல்லது நிறைவேறும் அந்தக் காலம் இதுவே என்று நிலைமைகள் எடுத்துரைக்கும் போது, ஏன் நாம் அந்த நெறி நீதி தீர்ப்பவரை, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை அடியாரை தேடக்கூடாது! அவரே ஷியா, சுன்னத் ஜமாஅத், பல்வேறு பிரிவுகள் மற்றும் நிலைபாடுகளின் வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து நம்மை ஒன்றிணைக்க கூடியவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "**எனது அந்தஸ்து நபிமார்களின் நடைமுறைகளுக்கு ஒப்பான அந்தஸ்தாகும். என்னை ஒரு விண்ணின் மனிதனாக கருதுங்கள்! பிறகு இவ்வனைத்து சண்டைகளும், முஸ்லிம்களில் காணப்பெறும் அனைத்து பூசல்களும் ஒருகணத்தில் தீர முடியும்...... என்னிடம் வாருங்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்கு உண்மை தெரியட்டும்..... எந்த இமாமுக்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ அது நானே ஆவேன். அதற்கான சான்றை என்னிடமிருந்து பெறுங்கள்.**"

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் அந்தஸ்து, மேன்மை மற்றும் சான்றோன்மையை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: "**அபூபக்ர், உமர், உஸ்மான், அலி (ரிழ்) ஆகியோரின் பண்புகளை மேற்கொள்ளாத வரை எவராலும் நம்பிக்கையாளராகவும் முஸ்லிமாகவும் ஆகவே முடியாது என்பதை நான் அறிகின்றேன்.**"

ஆக, இவர்கள் அனைவரும் நமக்கு முன்மாதிரிகள் என்பதே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை ஆகும். இந்தக் கொள்கை இருக்கும்போது முஸ்லிம்களிடமிருந்து பிரிவினையை அகற்றி அவர்களுக்கிடையில் இருக்கும் வேற்றுமையைக் களைந்து அவர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு ஜமாஅத்தாக அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே இருந்து விடவில்லையா?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை புகழ்ந்தவாறு கூறுகிறார்கள்: "**சித்தீக் நபியின் நிழலாக இருந்தார். நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் தாக்கம் இவர்கள் மீது விழுந்திருந்தது. மனமோ உறுதி எனும் ஒளியால் நிரம்பியிருந்தது. எனவே எத்தகைய வீரத்தையும் மன உறுதியையும் வெளிப்படுத்தினார்கள் என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அதற்கான முன்மாதிரி வேறெவரிடமும் கிடைப்பது கடினமாகும். இவர்களின் வாழ்க்கை இஸ்லாமிய வாழ்க்கையாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு இரண்டாம் ஆதமாவார்கள் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அபூபக்ர் இல்லாமல் இருந்தால் இஸ்லாமும் இருந்திருக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.**"

பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்பண்புகளையும் அந்தஸ்தையும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்து எவ்வளவு மேலோங்கியிருந்தது என்றால், சில நேரங்களில் இவர்களின் கருத்துக்கேற்ப திருக்குர்ஆன் வசனங்கள் இறங்கி வந்தன. இவர்கள் தொடர்பாக, ஷய்த்தான் உமரின் நிழலைக் கண்டு ஓடுகிறான் என்று ஹதீஸ் உள்ளது. இரண்டாவது ஹதீஸ் என்னவென்றால், எனக்குப் பிறகு நபி இருந்தால் அது உமராக இருந்திருப்பார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மூன்றாவது ஹதீஸ் என்னவென்றால், முந்தைய சமுதாயங்களில் இறை அறிவிப்பு பெறுபவர்கள் இருந்து வந்தார்கள். இந்த உம்மத்தில் ஒருவர் இறை அறிவிப்பு பெறுபவர் எனில் அவர் உமராவார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**"

பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர், உமர், உஸ்மான் (ரிழ்) ஆகியோரைப் பற்றி ஒன்றாகக் கூறுகிறார்கள்: "**எனது இறைவன் என்மீது வெளிப்படுத்தியுள்ளான். சித்தீக், ஃபாரூக் மற்றும் உஸ்மான் (ரிழ்) ஆகியோர் நற்செயல் புரிபவர்களாகவும், நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தார்கள்; அல்லாஹ் தேர்ந்தெடுத்த மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்; ரஹ்மான் இறைவனின் அருளால் சிறப்பிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள்.**"

ஆக, இந்த கலீஃபாக்களின் மேன்மை மற்றும் அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய புரிதல் இதுவாகும். இந்த அந்தஸ்தை ஒவ்வொரு முஸ்லிமும் இந்த சான்றோர்களுக்கு வழங்கும் போதுதான் அவர்

உண்மையான முஸ்லிம் எனப்படுவார். பரஸ்பர வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டுவந்து ஒரே சமுதாயத்தின் அங்கமாவார்.

இன்றைய நாட்களில் நாம் முஹர்ரம் மாதத்தை கடந்து கொண்டிருக்கிறோம். நாளை அல்லது நாளை மறுநாள் முஹர்ரம் 10 ஆம் நாள் ஆகும். அதில் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் தொடர்பாக ஷியாக்கள் தங்கள் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறார்கள். எவ்வாறு ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்களோ, நிச்சயமாக இது ஒரு அநியாயமான செயலாக இருந்தது. ஷியாக்கள் இந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அவர்களின் ஜமாஅத்தும் நுபுவ்வத் வம்சத்தின் அந்தஸ்தை அடையாளம் காணவில்லை என்று கருதப்படுகிறது. இந்தப் தப்பெண்ணத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் எப்பொழுதும் அகற்றுவதற்கு முயற்சி செய்து வந்திருக்கின்றது.

இப்பொழுது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்கள் மற்றும் கூற்றுகளின் ஒளியில், அவர்களின் பார்வையில் நுபுவ்வத்தின் வம்சத்துக்கு என்ன அந்தஸ்து இருந்தது, இதுதொடர்பாக அவர்கள் ஜமாஅத்துக்கு என்ன அறிவுரை வழங்கினார்கள் என்று கூறுவேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிர்ருல் கிலாஃபா என்ற நூலில் ஹஸ்ரத் அலீ (ரலி) தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

**“அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கமான மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அத்துடன் அவர்கள் திருமறையின் அமிர்தத்தை பருகுவதில் முன்னணியில் உள்ளவர்களாக இருந்தார்கள். நான் விழித்திருக்கும் நிலையில் அவர்களை கண்டேன். நான் அவர்களை படைப்பினங்களில் தகுதியானவர்களாகவும், ஒழுக்கத்தில் உறுதியானவர்களாகவும், தன்னடக்கம் மற்றும் பணிவான இயல்புடையவர்களாகவும், மின்னக்கூடியவர்களாகவும், ஒளிரக் கூடியவர்களாகவும் காணப் பெற்றேன். அவர்கள் என்னை மிகவும் அன்பு நேசத்துடன் சந்தித்தார்கள் என்று நான் சத்தியமிட்டு கூறுகிறேன். அவர்கள் என்னையும் எனது கொள்கைகளையும் அறிவார்கள் என்றும், நான் எனது நிலைப்பாட்டிலும் கொள்கையிலும் ஷியாக்களோடு கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளையும் அவர்கள் அறிவார்கள் என்றும் எனது உள்ளத்தில் போடப்பட்டது. ஆனால், அவர்கள் எந்த வகையான விருப்பமின்மையையும், வெறுப்பையும் வெளிப்படுத்தவில்லை; என்னிடமிருந்து விலகவும் இல்லை. மாறாக அவர்கள் என்னை சந்தித்தார்கள். கலப்பற்ற அன்பர்களைப் போன்று என்னுடன் அன்பு செலுத்தினார்கள். அவர்கள் உண்மையான தூய்மையான உள்ளம் கொண்ட மக்களைப் போன்று அன்பை வெளிப்படுத்தினார்கள். அவர்களுடன் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) ஆகிய இருவரும் மற்றும் தூதர்களின் தலைவர் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களும் உடனிருந்தார்கள். அவர்களுடன் மிகவும் அழகான தோற்றம் கொண்ட, நல்லவர்களான, கம்பீரமிக்க, அருளுக்குரிய, தூய்மையான, மரியாதைக்குரிய, ஒழுக்கமுடைய, அகமும் புறமும் ஒளியின் இருப்பிடமாக இருந்த பெண்மணியும் இருந்தார்கள். அவர்களை நான் கவலைமிக்கவர்களாக காணப் பெற்றேன். ஆனால் அவர்கள் அதை மறைத்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமதுஸ் ஸுஹ்ரா (ரலி) ஆவார்கள் என்று எனது உள்ளத்தில் போடப்பட்டது. அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். நான் படுத்திருந்தேன். அவர்கள் அமர்ந்து விட்டார்கள். அவர்கள் எனது தலையை தன் மடி மீது வைத்துக்கொண்டார்கள். பரிவை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் எனது ஏதோவொரு கவலையின் காரணமாக கவலையோடும் வேதனையோடும் இருக்கிறார்கள் என்பதையும், குழந்தைகளின் கஷ்டத்தின் போது தாய்மார்கள் காட்டுவதைப் போன்று பரிவையும், அன்பையும், நிம்மதியின்மையையும் வெளிப்படுத்துகின்றார்கள் என்பதையும் நான் பார்க்கிறேன்.”**

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**“எனக்கு கூறப்பட்டது. மார்க்கத் தொடர்பில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் பார்வையில் எனது அந்தஸ்து ஒரு மகனின் அந்தஸ்தை போன்றதாகும். பிறகு ஹஸ்ரத்**

**ஹஸன், ஹுஸைன் (ரலி) ஆகிய இருவரும் என்னிடம் வந்தார்கள். சகோதரர்களைப் போன்று என்னிடம் அன்பை வெளிப்படுத்தினார்கள். அனுதாபிகளைப்போன்று என்னை சந்தித்தார்கள். இந்த கஷ்ஃப் விழித்திருக்கும் போது வரும் கஷ்ஃபுகளில் ஒன்றாக இருந்தது. இது நடந்து பல வருடங்கள் கழிந்து விட்டன..... நான் ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் அவர்களின் இரு புதல்வர்கள் மீதும் அன்பு செலுத்துகிறேன். எவர் அவர்களோடு பகைமை கொள்வாரோ அவரோடு நான் பகைமை கொள்கிறேன்.**"

நவூதுபில்லாஹ்! நாம் நபி (ஸல்) அவர்களின் வம்சத்தின் மீது அன்பு கொள்ளவில்லை அல்லது நமக்கு அதைப்பற்றிய புரிதல் இல்லை என்று எவ்வாறு கூற முடியும்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் தொடர்பாக கூறுகிறார்கள்:

"**ஹுஸைன் (ரலி) அவர்கள் தூய்மையானவர்களாகவும், தூய்மைப்படுத்தக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஐயமின்றி இறைவன் தன் கரங்களால் தூய்மைப்படுத்தும், தனது அன்பால் செழிக்க வைக்கும் அந்த மக்களை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஐயமின்றி அவர்கள் சொர்க்கத்தின் தலைவர்களை சேர்ந்தவர்கள். அவரோடு அணு அளவு வன்மம் கொள்வதும் ஈமானை பறிப்பதற்கு காரணமாகிவிடும். அந்த இமாமின் இறையச்சம், இறையன்பு, பொறுமை, உறுதியாக நிலைநிற்றல், பற்றுறுதி மற்றும் இறைவழிபாடு ஆகியவை நமக்கு முன்மாதிரியாகும். நாம் அந்த குற்றமற்றவர்களுக்கு கிடைத்திருந்த நேர் வழியினை பின்பற்றக் கூடியவர்களாவோம். அவருடைய எதிரியாக இருக்கும் அந்த உள்ளம் அழிந்துவிட்டது. செயல் ரீதியாக அவர் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தும் உள்ளம் வெற்றி பெற்றுவிட்டது.**"

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இருந்த அந்த அன்பின் புரிதல் வேறு யாருக்கும் ஏற்பட முடியாது. ஆனால் எங்கு ஷியாக்கள் தீராப் பகை என்ற அளவு சென்று விட்டார்களோ, அங்கு அவர்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்கள் உண்மைத்துவத்தை எடுத்துரைத்தார்கள். எங்கு சுன்னத் ஜமாஅத்தினர்கள் தவறிழைத்தார்களோ அங்கு அவர்களுக்கும் சீர்திருத்தம் செய்யுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். இதுவே நெறி நீதி தீர்ப்பவர்களின் பணியாகும். இஸ்லாத்தின் உண்மையான போதனையை பரப்புவதற்கும், வழக்கத்தில் கொண்டு வருவதற்கான இந்தப் பணிக்காகவே அல்லாஹ் அவர்களை அனுப்பி இருந்தான். ஆனால் அவ்வாறிருந்தும் இந்தப் பிரிவுகள் அஹ்மதிகளையே தவறானவர்கள் என்று கூறுகின்றனர். ஆனால் இவ்வாறிருந்தும் நாம் பொறுமையோடும் உறுதிப்பாடோடும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த பணியை தொடர வேண்டும். அதற்காகவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம். அதாவது உண்மையான இஸ்லாத்தை உலகில் பரப்ப வேண்டும். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் நமக்கு காட்டிய அந்த முன்மாதிரியை நம் முன்வைக்க வேண்டும்.

**இன்றைய நாட்களில், குறிப்பாக இந்த மாதத்திலும் மேலும் எப்பொழுதுமே நாம் துஆக்களில் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும். தருது ஷரீஃப் ஓதுவதன்பால் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும்.** நாம் எவ்வளவு அல்லாஹ்வுக்கு முன் குனிவோமோ அவ்வளவு விரைவிலேயே அல்லாஹ் நமக்கு வெற்றியை வழங்குவான்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ
لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

*(தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னீ)*